# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW14

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கோவிந்தராஜ் | Caste | : | |
| S/o. | : | ரங்கன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 04.08.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A1 & A2 present.

முதல் விசாரணை;

நான் எருமநாயக்கன்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 22.12.2014ம் தேதி சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து மல்லூர் செல்வதற்காக சேலம் புதிய பேருந்து நிலையத்தில் ஜோதி பேருந்தில் ஏறினேன். 10.00 மணி அளவில் சந்தியூர் ஆட்டையாம்பட்டி பிரிவு ரோட்டில் பஸ் சென்றபோது நாமக்கல்லிருந்து சேலம் நோக்கி வந்த மணல் டிப்பர் லாரி சென்டர் மீடியனை இடித்துவிட்டு ரோட்டின் மறுபுறம் வந்து, ஜோதி பஸ்சின் மீது இடித்துவிட்டது. விபத்தில் பஸ்சில் வந்தவர்கள் 2 பேர் அங்கேயே இறந்துவிட்டார்கள். சம்வபத்தின்போது இருசக்கர வாகனத்தில் வந்த

ஒரு பெண், ஒரு ஆண், மற்றும் ஒரு குழந்தை இறந்துவிட்டதாக சொன்னார்கள். எனக்கு வலதுபக்க தலையிலும் வலது விலாவிலும் காயம் ஏற்பட்டது. பேருந்தில் இருந்த பலருக்கும் காயம் ஏற்பட்டது. பின்னர் நான் ஆம்புலன்ஸ் மூலம் ஆர்பிஎஸ் மருத்துவமனையில் சேர்ந்தேன். மேற்படி மருத்துவமனைக்கு மேலும் 4,5 பேர் வந்து சேர்ந்தார்கள். லாரியை ஓட்டி வந்த நபர் யார் என்று எனக்குத் தெரியாது. டிஎஸ்பி என்னை மருத்துவமனையில் விசாரித்தார். டிப்பர் லாரியின் எண்ணும் இருசக்கர வாகனத்தின் எண்ணும் எனக்குத் தெரியாது. ஆனால் டிப்பர் லாரி பச்சை கலர் வாகனம் ஆகும்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவத்தில் ஈடுபட்ட லாரி பச்சை கலர் டிப்பர் லாரி என்று தற்போதுதான் முதன் முதலாக சொல்கிறேன் என்றால் சரி. போலிசார் என்னை விசாரித்தபோது பச்சை கலர் டிப்பர் லாரி என்று சொல்லவில்லை என்றால் எனக்கு நினைவில்லை. ஜோதி பேருந்தில் சம்பவத்தின்போது பயணம் செய்ததாகவும், விபத்தில் எனக்கு காயம் ஏற்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரி கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் 1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை தழுவிக்கொள்ளப்பட்டது.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.